கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு.கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப.,

ந.க.எண். 1910/2016/பே2 நாள் : 13.06.2023

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிருவாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – நுழைவுப் பணியிடங்களில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் – கல்வித்தகுதியின் அடிப்படையில் வரித்தண்டலர் பணியிடங்களில் சிறப்பின நிகழ்வாக ஈர்த்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது – பணியிடம் வழங்கப்பட்டது – கீழ்நிலைப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து கருத்தியலாக தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியில் ஈர்த்துக் கொள்ள அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.125, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.27.05.1999.
2. அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.984/2013/அ3, நாள்.28.11.2019 செயல்முறைகள்.
4. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.1910/2016/பே2 நாள்.29.11.2019 செயல்முறைகள்.
5. பேரூராட்சிகளின் - ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021 செயல்முறைகள்.
6. அரசுக்கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை கடித எண்.360/பேரூ1/2023-4, நாள்.08.03.2023 மற்றும் 17.04.2023.
7. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.14709/2021/அ2, நாள்.05.05.2023.
8. திருமலையம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.174/2023 நாள்.24.05.2023.
9. செட்டிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.426/2023, நாள்.25.05.2023.
10. ஆலாந்துறை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.38/2023, நாள்.24.05.2023.
11. பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.220/2023, நாள்.25.05.2023.
12. தொண்டாமுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2023, நாள்.25.05.2023.

/த.பி.பா

13. சிறுமுகை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.326/2023, நாள்.24.05.2023.
14. வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.419/2023/ஆ, நாள்.24.05.2023.
15. சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.27/2022, நாள்.24.05.2023.

-----

**ஆணை:**

கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் துப்புரவு, வாகன ஓட்டுநர், தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகளை தவிர்த்து பிற பணிகளை கவனிக்க 31.12.1996–ஆம் தேதிக்கு முன்பிருந்து தினக்கூலி பணியாளர்களாக பணியாற்றிய பின்வரும் பணியாளர்களை பேரூராட்சிகளில் அவ்வபோது ஏற்படும் காலியிடங்களில் நுழைவுப் பணியிடங்களில் நியமனம் செய்ய அனுமதித்தும், தனியர்களது பணியினை வரன்முறை செய்ய அனுமதித்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு வரை ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் பணி அமர்த்தியும், ஓராண்டுக்கு பிறகு காலமுறை ஊதியத்திற்கு கொணர அனுமதித்தும் பார்வை 1இல் காணும் அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைக்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் பின்வரும் அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 8 முடிய கண்டுள்ள பணியாளர்கள் அவர்களது பெயருக்கெதிரே கலம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நுழைவுப் பணியிடங்களில் ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் பணியேற்று அதன் பின்னர் கீழ்நிலைப் பணியில் ஊதிய ஏற்றமுறைக்கு கொணரப்பட்டனர் என்பது தனியர்களது பணிப்பதிவேடு உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து உறுதி செய்து கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் அரசு நிலையாக்கப்படாத நுழைவுப் பணியிடங்களில் பணியாற்றி வரும் பின்வரும் பணியாளர்களை அவர்களது கல்வித்தகுதியின் அடிப்படையில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களிலுள்ள நுழைவுப் பணியிடங்களான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்களில் சிறப்பினமாக கருதி, இப்பணியாளர்களை 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து தனியர்கள் வரித்தண்டலர் / இளநிலை உதவியாளர் போன்ற பணியிடத்தில் முறையாக நியமனம் செய்யப்பட்டு பணியேற்கும் நாளிலிருந்து பணப்பலன்கள் வழங்க அனுமதித்து பார்வை 2இல் காணும் அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

/த.பி.பா

மேற்காணும் அரசாணைக்கிணங்க, பார்வை 3இல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகளில் இப்பணியாளர்களுக்கு பின்வரும் அட்டவணையில் கலம் 4 இல் கண்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்கள் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டதின்பேரில், தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதிக்குட்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பார்வை 4இல் காணும் செயல்முறைகளில் அனுமதித்தவாறு பணியில் இணைந்து கொண்டுள்ளனர் என்பது ஆவணங்களை சரிபார்த்து உறுதி செய்து கொள்ளப்பட்டது.

இவ்வாறு, பார்வை 1 முதல் 4 முடிய கண்டுள்ள இனங்களின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் 31.12.1996ஆம் தேதிக்கு முன்னர் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை நுழைவுப் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட பின்வரும் பணியாளர்களை 02.06.2001 முதல் கருத்தியலாக அரசு நிலையாக்கப்பட்ட நுழைவு பணியிடமான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் ஈர்த்து அதற்கான பணப்பலனை வரித்தண்டலராக பணியேற்ற நாள் முதல் வழங்க அனுமதித்து பார்வை 5இல் காணும் செயல்முறைகளில் பேரூராட்சிகளின் ஆணையாளர், சென்னை அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டதன்பேரில், இவ்வாணை முறையாக சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு, இதற்கான பணப்பலன்கள் தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதியில் பணியேற்ற நாள் முதல் வழங்கப்பட்டுள்ளது என்பதும் ஆவணங்களை சரிபார்த்து உறுதி செய்து கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பார்வை 6 மற்றும் 7இல் காணும் அரசுக்கடிதம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ஆகியவற்றில் பரிந்துரைத்தவாறு, கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999இன் வாயிலாக கீழ்நிலை நுழைவுப் பணியிடத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு, அதன் பின்னர் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019இல் பரிந்துரைத்தவாறு 02.06.2001 அல்லது கீழ்நிலைப் பதவியில் பணியேற்ற நாள் முதல் அரசு நிலையாக்கப்பட்ட நுழைவு பணியிடமான இளநிலை உதவியாளர் /வரித்தண்டலர் பணியிடத்தில் கருத்தியலாக ஈர்த்துக் கொள்ளப்பட்டு, இப்பணியிடத்தில் பணியேற்ற நாள் முதல் பணப்பலன்கள் பெற்றுவரும் நிலையில் தனியர்களது பணியினை இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் கருத்தியலாக பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதற்கான ஆணையினை அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

/த.பி.பா

இப்பணியாளர்கள் அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999இல் பரிந்துரைத்தவாறு கீழ்நிலை நுழைவுப் பணியிடத்தில் பணியில் இணைந்து அதன் பின்னர் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019இல் பரிந்துரைத்தவாறு இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் போன்ற அரசு நிலையாக்கப்பட்ட நுழைவு பணியிடத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதும், தனியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நடவடிக்கை, குற்றவியல் நடவடிக்கை ஆகியன ஏதுமின்றி தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்றும் தனியர்களது பணியினை வரன்முறை செய்யக்கேட்டும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களால் பார்வை 8 முதல் 15 முடிய கண்டுள்ளவாறு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் பணியாற்றி வரும் பின்வரும் அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 8 முடிய கண்டுள்ள பணியாளர்கள் அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999, அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019 ஆகியவற்றில் பரிந்துரைத்தவாறும், பார்வை 6 மற்றும் 7இல் காணும் அரசுக்கடிதம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர்களை அவர்களது பெயருக்கெதிரே அட்டவணையில் கலம் 5 இல் கருத்தியலாக அரசு நிலையாக்கப்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் பணியேற்க அனுமதிக்கப்பட்ட நாளினை ஆதாரமாகக் கொண்டு, தனியர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதிக்குட்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் கலம் 6 இல் கண்டுள்ள தேதியில் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்ய அனுமதித்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

/த.பி.பா

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் தற்போது வகித்துவரும் பதவி (திருவாளர்கள்) | கீழ்நிலைப் பதவி மற்றும் பணியேற்ற நாள் | அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள். 31.05.2019இல் பரிந்துரைத்தவாறு வழங்கப்பட்ட பணியிடம் மற்றும் பணியேற்ற நாள் | தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதியில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தின் கருத்தியலாக ஈர்த்துக் கொண்டு ஊதியம் நிர்ணயம் செய்ய அனுமதிக்கப் பட்ட நாள் | தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தின் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | ம.திராவிடமணி, இளநிலை உதவியாளர், திருமலையம்பாளையம் பேரூராட்சி. | 30.08.2001 மு.ப. / சுங்க காவலர் / வால்பாறை | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / சிறுமுகை | 30.08.2001 மு.ப. | 30.08.2001 மு.ப. |
| 2 | கே.வரதராஜன், இளநிலை உதவியாளர், செட்டிபாளையம் பேரூராட்சி. | 11.06.2001 மு.ப. / இரவுக் காவலர் / காங்கேயம் | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / ஆனைமலை | 11.06.2001 மு.ப. | 11.06.2001 மு.ப. |
| 3 | அ.நாகராஜ், வரித்தண்டலர், ஆலாந்துறை பேரூராட்சி. | 01.09.2001 மு.ப. / சந்தை காவலர் / பூலுவபட்டி | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / ஆலாந்துறை | 01.09.2001 மு.ப. | 01.09.2001 மு.ப. |
| 4 | பி.மனோன்மணி, வரித்தண்டலர், பள்ளபாளையம் பேரூராட்சி. | 11.06.2001 மு.ப. / இரவுக் காவலர் / சங்ககிரி | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / மோப்பிரிபாளையம் | 11.06.2001 மு.ப. | 11.06.2001 மு.ப. |
| 5 | சி.லட்சுமி, இளநிலை உதவியாளர், தொண்டாமுத்தூர் பேரூராட்சி. | 07.09.2009 மு.ப. / அலுவலக உதவியாளர் / காரமடை | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / சிறுமுகை | 07.09.2009 மு.ப | 07.09.2009 மு.ப |
| 6 | கே.பிரேமவசந்தி, இளநிலை உதவியாளர், சிறுமுகை பேரூராட்சி. | 25.09.2006 மு.ப. / பதிவறை எழுத்தர் / காங்கேயம் | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / கிணத்துக்கடவு | 25.09.2006 மு.ப. | 25.09.2006 மு.ப. |
| 7 | கு.கவிதா, வரித்தண்டலர், வெள்ளலூர் பேரூராட்சி. | 13.06.2001 மு.ப. / இரவுக் காவலர்/ நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / வெள்ளலூர் | 13.06.2001 மு.ப. | 13.06.2001 மு.ப. |
| 8 | வே.பாலதண்டாயுதபாணி, இளநிலை உதவியாளர், சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சி. | 21.08.2002 மு.ப. / துப்புரவு மேற் பார்வையாளர் / துடியலூர் | 29.11.2019 பி.ப. / வரித்தண்டலர் / அவினாசி | 21.08.2002 மு.ப | 21.08.2002 மு.ப |

/த.பி.பா

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் கண்டுள்ள பிரிவு 28இன்படி, மேற்காணும் அட்டவணையில் 1 முதல் 8 முடிய கண்டுள்ள பணியாளர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியில் கருத்தியலாக பணியேற்க அனுமதிக்கப்பட்ட கலம் 5 இல் கண்டுள்ள நாள் முதல் இப்பணியிடத்தில் தகுதிகாண்பருவம் துவங்க அனுமதித்தும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இவ்வாணையின் விபரங்களை சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடுகளில் பதிந்து இதற்கான அறிக்கையினை அனுப்பிவைக்க தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. இவ்வாணையானது அரசாணை எண்.76 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019 மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக ந.க.எண்.984/2013/அ3 நாள்.23.08.2021 செயல்முறை ஆணை ஆகியவற்றிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள WP No.17989/2019, WP No.23426/2019, WP No.21574/2019 மற்றும் WP No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புரைகளின் முடிவிற்குட்பட்டது.
2. மேற்குறித்த வழக்குகளில் பிறப்பிக்கப்படும் நீதிப்பேராணைகளின் பொருட்டு இவ்வாணையினை நியமன அலுவலரால் திருத்தம் அல்லது இரத்து செய்யப்படும் எனும் உரிமை தக்கவைத்து கொள்ளப்படுகிறது.
3. இவ்வாணையில் இடம்பெற்றுள்ள பணியாளர்கள் எவரேனும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான அடிப்படை பயிற்சியினை மேற்கொள்வதற்குரிய வயது வரம்பினை கடந்திருப்பின், இப்பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்து தகுதிகாண்பருவம் விளம்புவதற்குரிய முன்மொழிவினை தனியே அனுப்பி வைக்க வேண்டும்.

Kavanthi pati 13.6 3/3

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் / வரித்தண்டலர்கள்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
(தொடர்புடைய செயல் அலுவலர்கள் மூலமாக)

13/6/2023

நகல் :
1) பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-28.
2) செயல் அலுவலர், திருமலையாம்பாளையம் / செட்டிபாளையம் / ஆலாந்துறை / பள்ளபாளையம் / தொண்டாமுத்தூர் / சிறுமுகை / வெள்ளலூர் / சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சிகள், கோயம்புத்தூர் மாவட்டம் (தனியர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பவும், பணிப்பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டும்)
3) பே2 இருப்பு கோப்பு.

12/6/2023 13/6/2023